**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 133/2019**

**Date :27.02.2026**

**பி. வா.சா3 - மனோசுகுமாரன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

எனது முழுபெயர் என்ன என்றால் மனோசுகுமாரன். நான் அச்சன்குளத்தில் தாமசன் என்றால் சரிதான். அச்சன் குளம் கன்னியாகுமரியில் இருந்து எவ்வளவு கி.மீ என்றால் 7 ½ கி.மீ. அச்சன்குளம் ஊரிலிருந்து பொற்றையடி எவ்வளவு கி.மீ என்றால் 3 கி. மீ. அச்சன்குளத்தில் எத்தனை இந்து கோவில்கள் என்றால் முத்தாரம்மன் கோவில் 2, சாஸ்தா கோவில் மற்றும் உமையம்மன் கோவில். நான் மேற்படி கோவில்களில் எந்த கோவிலுக்கு நானும் எனது குடும்பத்தாரும் அதிகமாக செல்வோம் என்றால் எந்த கோவிலுக்கும் அதிகமாக செல்வதில்லை. செல்வதென்றால் எந்த கோவிலுக்கு செல்வோம் என்றால் வடக்கு பக்கம் உள்ள முத்தாரம்மன் கோவில். எனது குழந்தைகளும் மேற்படி கோவிலுக்கு அடிக்கடி செல்வதில்லை என்றால் சரிதான்.

எனது குழந்தைகள் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். எனது குழந்தைகள் தற்போது எங்கள் ஊரில் இல்லை என்றால் சரிதான். கோவில் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பது எவ்வாறு தெரியும் என்றால் எனது சொந்த ஊர் பொற்றையடி, வசிப்பது அச்சன்குளம். எத்தனை வருடமாக அச்சன்குளத்தில் இருந்து வருகிறேன் என்றால் சிறு வயதில் இருந்தே குடும்பத்துடன் அங்கு தான் இருந்து வருகின்றோம். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கொத்த வேலை.

கோவிலில் நான் சாமி ஆடுவது உண்டு என்றால் சரிதான். கூலிக்கு சாமி ஆடுவது

உண்டு என்றால் சரியல்ல. குறி சொல்வேனா என்றால் இல்லை. அச்சன்குளத்தில் உள்ள அம்மன் கோவிலில் மது அருந்திவிட்டு போலியாக சாமி ஆடியதால் என்னை கோவிலிலிருந்து அடித்து விரட்டிவிட்டார்கள் அதற்கு பின் நானும் என் குடும்பத்தார்களும் மேற்படி கோவிலுக்கு செல்வதில்லை என்றால் சரியல்ல.

நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க யார் அழைத்தார்கள் என்றால் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததால் வந்தேன். நான் இந்த வழக்கின் தரப்பினரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் ஒத்த பனை கோவில் சொத்தில் எனக்கும் உரிமை உண்டு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆகையால் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி கோவில் சொத்து எனக்கு அல்லது எனது குடும்பத்தாரர்களுக்கு உரிமைப்பட்டதாக ஏதேனும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கோவில் சொத்து எனக்கு அல்லது எனது குடும்பத்தாரர்களுக்கு உரிமைப்பட்டதாக காட்டுவதற்கு நிலவரி செலுத்தி உள்ளேன் என்றாலும் அதன் ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் இல்லை. மேற்படி கோவில் சொத்தில் பட்டா எனது பெயரில் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி கோவிலுக்கு மின் இணைப்பு உண்டு. அது எனது பெயரில் உள்ளதா என்றால் இல்லை. எங்கள் சொத்தில் கோவிலை நடத்துவதற்கு 8ம் பிரதிவாதி ஆத்தியப்பனை நியமணம் செய்துள்ளோம் என்றால் சரிதான். எங்கள் சொத்தில் கோவிலை நடத்துவதற்கு 8ம் பிரதிவாதி ஆத்தியப்பனை நியமணம் செய்து பொறுப்பை ஒப்படைத்தற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

வழக்குப் பட்டிகை சொத்து கோவிலில் சாமி ஆடுவது உண்டா என்றால் இல்லை.

வழக்குப் பட்டிகை சொத்து கோவிலில் நானோ வாதியோ பிரதிவாதிகளோ உறுப்பினரா என்றால் இல்லை. பிரதிவாதிகள் வரவு செலவு கணக்குகள் எழுதுவார்களா என்றால் எழுதுவார்கள். மேற்படி வரவு செலவு கணக்குக்காகவும் திருவிழா நிகழ்ச்சி சம்மந்தமாகவும் 2 மினிட் புக்குகள் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். கோவில் கமிட்டியில் நான் உறுப்பினரா என்றால் இல்லை. மேற்படி மினிட் புக்கில் நான் கையெழுத்திட்டேனா இல்லை.

வழக்கு பட்டிகை கோவில் சம்மந்தமாக பிரதிவாதிகள் வாதிகளை துன்புறுத்தியதாகவும் கோவிலை உடைத்ததாகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் உங்கள் பெயர் உண்டா என்றால் இல்லை. மேற்படி வழக்கில் சாட்சி கையெழுத்திட்டேனா என்றால் இல்லை. 2019 ல் ஆத்தியப்பன் நடத்தி வந்த கோவிலை PWD யில் இருந்து வந்து இடித்தார்கள். அது குறித்து தெரியுமா என்றால் தெரியும். இடித்த நாளில் தான் தெரியும். மேற்படி சம்பவம் குறித்து புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது இருப்பிடமும் சொந்த ஊரும் அச்சன் குளம் என்றால் சரிதான்.

ஆனால் இவ்வழக்கில் நான் பொற்றையடியில் சேர்ந்தவன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய ஊர் பொற்றையடி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க இரு சக்கர வாகனத்தில் வந்தேன் என்றால் சரிதான். என்னை அழைத்து வந்தது பொற்றையடியை சேர்ந்த பிரதிவாதி கணபதி என்பவன் மகனுடன் தான் வந்தேன் என்றால் சரிதான். எனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். நான் ஆத்தியப்பன் கேட்டு கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்திற்கு பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனக்கும் கோவிலுக்கும் சம்மந்தமில்லை. பிரதிவாதி கேட்டு கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை கோவிலுக்கு கிழக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் ஆறும் ரோடும் உள்ளது. வடக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் வாய்க்கால். ஆத்தியப்பன் வீடு கோவிலுக்கு எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை கோவிலில் எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் எவ்வித உரிமையும் கிடையாது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**